ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

அதிக ஸாமர்த்தியமுள்ளவனுக்கும் ஸஹாயமில்லாவிடில் கார்யஸித்தி கைகூடுவது கஷ்டமாகும் என்றால், ஸாமர்த்தியமில்லாதவனுக்கு உதவிபுரிய ஒருவருமில்லையாயின், அவன் கார்யம் நடக்கமாட்டாதென்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ; அதனாற்றான் நமது சாஸ்திரமும் இந்த லௌகிக திருஷ்டாந்தத்தைக் கொண்டுஅற்பக்ஞனும்,அற்பசக்தியுள்ளவனுமிருக்கும் ஜீவன் பரமேசுவரனைச் சரணமடைய வேண்டுமெனக் கூறுகின்றது. அதையனுஸரித்தே நம்முன்னோர்நடந்திருக்கிறார்களென்று அவர்களது சரித்திரங்களிலிருந்து தெரியவருகின்றது. அதுபோலவே தான் தற்காலத்தியவர்களும் தங்களது இஷ்டகார்யத்தை ஸாதித்துக்கொள்ளப்பலபேர்களை ஸஹாயமாயும், பின்துணையாயும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் தன்போலிய மனிதர்களின் கூட்டத்தைப் பின்துணையாகக்கொண்டே ஸகலகார்யங்களையும் ஸாதித்துவிடலாமென்று நினைக்கிறார்களேயன்றி பெரியோர்களைப்பின்பற்றவேண்டும் பரமேசுவரனிடம் பக்திபாராட்டவேண்டும் என்றுநினைப்பதில்லை யென்பதோடு மாத்திரமல்ல, பெரியாரைப் பழிக்கவும், ஈசனது ஆக்ஞையைமறுக்கவும் துணிந்துவிடுகிறார்கள். அதனால் இவர்கள்காரியம்கைகூடுவதில்லை. அப்படி நேருவதற்கு வேறு எதையோகாரணமாகநினைக்கிறார்களேயல்லது பெரியாரைப்பழித்த தோஷத்தாலென்று நினைப்பதில்லை. சிலர் தனது கார்யஸித்திக்குக் கடவுள் அநுகூலம்செய்யவேண்டுமென்று வார்த்தையில் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், அனுஷ்டானத்தில் ஈசனை ஆராதிக்க முயலுவதில்லை. விபரீதமாக அவனது ஆக்ஞாரூபமான சுருதிஸ்மிருதிகளைத் தூஷணையும் செய்கிறார்கள்- தன் கார்யத்திற்கு உதவிபுரியவேண்டுமெனக் கருதப்படும் மனிதனைப் போற்றுவதும் புகழ்வதுமாயிருப்பது போலும் அவனது நோக்கம்போல் நடப்பதுபோலும், பரமேசுவரனைப் போற்றிப்புகழ்ந்து பணிந்து ஸ்துதித்து அவன் கட்டளைப்படி நடப்பதில்லை. நம் பெரியோர்கள் பரமேசுவரனது பிரசாதத்தைப்பெற மந்திரத்தைப் பெரிய ஸாதனம் கண்டுபிடித்துக் கைகண்டபலமாக அதை ஜபித்து வழிகாட்டிவருகிறார்கள். மந்திரங்களின் தத்துவங்களை விளக்கி குருபீடத்தையும் ஆசிரயித்திருக்கிறார்கள். இது போலவே தற்காலத்தியவர்களும் குருஆராதனம்செய்து அவரிடமிருந்து மந்திரஸூக்ஷ்மத்தையறிந்து உபதேசம்பெற்று அதை ஜபித்துபரமேசுவரனைப்போற்றிஅவனதுஆக்ஞாஸித்தமான வர்ணாச்ரமதர்மத்தை செய்துஆராதித்துகோரினபலனை அடைந்து க்ஷேமமாயிருப்பார்களாக.

சுபம்!

பத்திராதிபர்.

உ

# ஆர்ய தர்மம்.

பிரமோத-௵ வைகாசி-௴ ௧௯௨

## ஸ்ரீ சங்கர ஜயந்தி.

இந்த மஹோத்ஸவம் குருபக்தியுள்ளவிடங்களிலெல்லாம் நடைபெற்றிருக்கிறது. அதன் விபரம் வேறிடத்தில் குறிப்பிட்டிருக்கிறது. அந்த மஹோத்ஸவக்கொண்டாட்டத்தினால் குருபக்தசிகாமணிகள் ஆத்மசிரேயஸ்ஸை யடைந்திருப்பார்கள். சில கிராமங்களில் இவ்வருஷத்திற்றான் புதிதாகக்கொண்டாட ஸ்வல்ப்பப்பிரயத்தனப்படுகிறார்கள். பொதுவாக ஜனங்களுக்கு தர்மத்தில் சிரத்தை குறைந்திருப்பதற்கு குருபக்தியில்லாததே காரணமாகும். வேதவித்தையைத்தவிர மற்ற கல்வித்துறையிலிறங்கியவர்களும் தனக்கு உபாத்தியாயாயிருந்து பாடம்சொல்லிக்கொடுத்தவரிடத்தில் பரமபக்தியைப் பாராட்டி வந்தார்கள். அதாவது தெருத்திண்ணைப் பள்ளிக்கூடமிருந்தபொழுது பையன்கள் காலையில் எழுந்து பள்ளிக்கூடத்திற்கு நான் முன்னே நான்முன்னேஎன்று சென்று மூஷிகவாஹனம் ஸரஸ்வதீஸ்தோத்திரம் ராகவாஷ்டகம் முதலிய ஸ்தோத்திரபாடம் சொல்லி ஸூரியோதயத்திற்கு முன் சேர்ந்தாப்போல் முறைசொல்லிக்கொண்டு ஆறு, குளம், கிணறு முதலியவிடஞ்சென்று தந்தசுத்திசெய்து திருநீரணிந்துவிடுபோய் தூக்குச்சுவடி எடுத்துக்கொண்டு பள்ளிசேர்ந்து உபாத்தியாயர் பாதம் பணிந்து படிப்பார்கள். உபநயனம் ஆனதும் குருகுலத்தில் வேதாத்யயனம் செய்வார்கள். அப்பொழுது அவர்களுக்குள்ள குருபக்தி சொல்லமுடியாது. அப்படியிருக்கையில் ஆத்மவித்தையை உபதேசித்த பரமாசாரியன்மீது பக்திஎவ்வாறு இருந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். நம் முன்னோர்கள் திண்ணைப்பள்ளிக்கூடத்திலிருந்தே குருபக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருக்கி பரமாசாரியாளிடம் நிரதிசயபக்தி பாராட்டி பரமசிரேயஸ்ஸை அடைந்தார்கள். தற்காலத்திய படிப்பின் ரீதியோ மாத்ருத்துரோகம், பித்ருத்துரோகம், குருத்துரோகம்

முதலிய கெடுதல்களுக்குக் காரணமாயேற்பட்டுவிட்டதே என்று சொல்லிக்கொண்டே அந்த ரீதியை விலக்கமுடியாமல் தீராத்துயரத்தை அனுபவிக்கிறார்கள். உஞ்சவிருத்தி எடுத்தோ வேறு செய்யாக்காரியம் செய்தோ பையனைப் படிக்கவைத்துப் பெரிய பரீக்ஷைத்தேறவும் குலம், கோத்திரம், ஒன்றையும்கவனிக்காமல்படிப்பொன்றைமாத்திரம் பார்த்துப்பெண்ணைக்கொடுக்கத்துணிந்தவர் பெண்ணை எதிர்ஜாமீனுடனும் சீர்சிலத்தியுடனும் விவாஹம் செய்யவும் நேர்ந்துவிட்ட பிறகு கஷ்டப்பட்டு படிக்கவைத்த தகப்பன் தாயார் கூட இருந்து சுகித்திருக்கும் குடும்பங்களைக்காண்பது அரிதிலுமரிது. ஆங்கு குருபக்தி எங்கேயிருக்கப்போகிறது. ஆயினும் எவ்வளவோ மஹானுபாவர்கள் இந்த துஷ்டரீதியில் அகப்படாமல் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பழமொழிப்படி மாத்ருபக்தி, பித்ருபக்தி, தைவபக்தி, குருபக்திநிறைந்தவர்களாயிருக்கிறார்கள். சில பெரியார் "குருபக்தசிகாமணி" என்பதாதி பிருதும்பெற்று விளங்குகிறார்கள். அத்தகைய மஹான்களுடைய கோஷ்டியாரால் ஆசார்யஜயந்தி மஹோத்ஸவம் வெகு விமரிசையாய் ஆங்காங்கு நடத்தப்பட்டதை அறிந்து ஸாதுக்கள் சந்தோஷிக்கிறார்கள். இப்படியே எல்லாவிடங்களிலும் ௸ மஹோத்சவத்தை சிறப்பாய் நடத்தி ஸத்குரு க்ருபைக்குப் பாத்திரமாகி ஸகல சிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்!

பத்திராதிபர்.

---

## தலையூர் அத்வைத வித்யாசாலை சங்கரஜயந்தி வைபவமும் வர்ணாச்ரமதர்ம ஸபா ஸ்தாபனமும்.

நன்னிலம் தாலூகா தலையூர் கிராமத்தில் கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு பகவத்பாதாசார்யாளின் அனுக்ரஹத்தின்பேரிலும் பின்னும் ஆஸ்திகபிராமணோத்தமர்களின் பொருளுதவியாலும் ஓர் அத்வைத வித்யாசாலை ஸ்தாபிக்கப்பட்டு ௸ வித்யாசாலையானது 2-2-22ல் உபக்ரமிக்கப்பட்டு நடந்துவருகிறதென்கிற விபரம் பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

௸ வித்யாசாலையில் முதல் மூன்று வருஷங்களில் காலம் சென்ற பிரம்மஸ்ரீ வேப்பத்தூர் ஸுப்பய்யா சாஸ்திரிகளவர்கள்

உபாத்தியாயாக இருந்து ப்ரஸ்தானத்ரயம் பாஷ்யபாடம் நடத்தி சிஷ்யப்பிரஸித்தியுடன் வித்யாசாலையைபிரகாசிக்கச்செய்துவந்தார்கள். பிறகு பிரம்மஸ்ரீ போலகம் வெங்கட்டராமசாஸ்திரிகளும், உபாத்தியாயாக இருந்துவந்தார்கள். பிறகு போலகம் பிரம்மஸ்ரீ P.S. ஸ்ரீ ராமசாஸ்திரிகளவர்கள் மூன்று வருஷகாலமாக ஷை வித்யாசாலையில் உபாத்தியாயாக அமர்ந்து வித்யார்த்திகளுக்கு सिद्धित्रयमानदीयम् परिमळम् விவரணம் முதலிய வேதாந்தவாதகிரந்தங்களில்பஞ்சலக்ஷணீ ஸாமான்னிய நிருக்தி முதலியநியாயவாதகிரந்தங்களிலும் ஜைமினீயந்யாய மாலை முதலிய மீமாம்ஸா கிரந்தங்களிலும் அலங்காரக் கிரந்தங்களிலும் பாடப்ரவசனம் செய்து வருகிறார்கள். நாளது 1930ஸு மேமீ 3 வக்குச்சரியான பிரமோதஸு சித்திரைமீ 21௳ ஸ்திரவாரத்தன்று சங்கரஜயந்தி உத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு ஷை வித்யாசாலையில் சங்கரபகவத்பாதாராதனமும் ப்ரஸ்தானத்ரய பாஷ்யபாராயணங்களும் சங்கரவிஜய பாராயணமும் ராத்திரிவேளையில் சங்கரபகவத் பாதாராதனமும் சங்கரசரித்ரோபன்யாஸமும் ஐந்துநாட்கள் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

அதில் முதல் தினம் ராத்திரி வித்யாசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ போலகம் P. S. ஸ்ரீராமசாஸ்திரிகளவர்கள் உபோத்காதம் ஸ்ரீஆசார்ய ஜனனம் தேவாவதாரங்கள் என்கிற விஷயத்தைப்பற்றி உபன்யாஸம் செய்து மிகவும் சந்தோஷத்தை ஜனங்களுக்கு உண்டுபண்ணினர். அதே பிரகாரம் பாக்கிநாட்களிலும் மாயவரம் பிரும்மஸ்ரீ ஸப்தாகம் சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளவர்கள் குமாரர் பிரும்மஸ்ரீ பஞ்சாபகேசசாஸ்திரிகளவர்களும் விக்கிரபாண்டியம் பிரும்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகளவர்களும், எனது குமாரன் சிரஞ்சிவி சுப்ரமண்யனும், வேப்பத்தூர் பிரும்மஸ்ரீ வைத்தினாதசாஸ்திரிகளவர்களும் முறையே உபன்யாசம் செய்து வந்து ஐந்தாநாள் உபன்யாசத்தின் பிறகு மேற்சொல்லிய பஞ்சாபகேச சாஸ்திரிகள், கோபாலசாஸ்திரிகள், சுப்பிரமணியன் இம் மூவரும் வாக்யார்த்தங்கள் சொல்லி மங்களமாய் ஷை உத்ஸவம் முடிவுபெற்றது.

பிறகு ஷைஉபந்யாஸங்களைக்கேழ்க்க வந்திருந்த ஷைதலையூர் பாவட்டகுடி கிராமவாஸிகளான ஆஸ்திகப்பிராம்மணர்கள் ஷை உத்ஸவவிமர்சையைப் பார்த்தும் வாக்யார்த்தோபந்யாஸங்களைக்

கேட்டும் மிகுந்த சந்தோஷத்துடன் ஏகமனதாய் இதேசுபதினத்தில் ஜகத்க்ஷேமத்தின்பொருட்டு இந்த வித்யாசாலையின்சார்பாக ஓர் வர்ணாச்ரமசபை ஏற்படுத்திக்கொள்ளவேணுமென்றும் ஷை வித்யாசாலை உபாத்தியாயர் ப்ரம்மஸ்ரீ ராமசாஸ்திரிகளவர்களுக்கு சாஸ்திரதிலகமென்கிற பிருது அளிக்கவேணுமென்றும் சொல்லியதின்பேரில் அதன்படியே வர்ணாச்ரமதர்மஸபை ஏற்படுத்தப்பட்டு ஷை ஸபையில் பாவட்டகுடியிலிருக்கும் போலகம் பிர்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகளவர்களைத் தலைவராக இருக்கவேணுமென்றும் என்னை கார்யதர்சியாக இருக்கவேணுமென்றும் சபையிலுள்ளவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் அதேவிதமாக சபையில் தீர்மானிக்கப்பட்டது. ஷை சபையோர்களின் இஷ்டத்திற்கிணங்கி ஷை ஸ்தானங்கள் எங்களாலும் அங்கீகரிக்கப்பட்டது. உடனே மஹாஜனங்கள் கேட்டுக்கொண்டபடி ஷை பிர்மஸ்ரீ ராமசாஸ்திரிகளவர்களுக்கு இந்த வர்ணாச்ரமதர்மஸபையின் சார்பாக சாஸ்திரதிலகமென்கிற பட்டமுமளிக்கப்பட்டது.

ஷை ஸபைக்கு வெகுபேர்கள் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். ஷை ஸபையில் மாதம் இருமுறை வித்வான்களைக் கொண்டு வர்ணாச்ரமதர்மவிஷயமாய் உபந்யாஸம் செய்யவேணுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஷை ஸபையைச்சென்னைமாகாண சபைக்கிளையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்போதைக்கப்போது ஸபையில் நடக்கும் விஷயங்கள் பத்திரிகையில் பிரசுரப்படுத்தப்படும் இந்த ஸபை மேன்மேலும் மெம்பர்கள் சேர்ந்து மிகவும் அபிவிருத்தி ஆகவேணுமென்று ஈசுவரனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

அத்வைதவித்யாசாலை வர்ணாச்ரமதர்மஸபா கார்யதர்சி

தலையூர் கிருஷ்ணஸாமிஅய்யர்.

---

## ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம்.

ராஜாபாடசாலை, கும்பகோணம்.

கும்பகோணம் ராஜாதர்மபாடசாலை மாணவர்களால் வழக்கப்படி நடத்தப்பட்டுவரும் சங்கரஜயந்திமஹோத்ஸவம் 3-5-30 சனிக்கிழமையன்று அதிவிமர்சையாய் நடந்தேறியது. அன்று

அக்கல்லூரி விசேஷமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை 7-மணிக்கு அவ்விழாவைக் கொண்டாட ஸ்ரீமான்களான ராஜமன்னார்குடி சாஸ்திரரத்னாகர மஹோபதேசக பிரம்மஸ்ரீ யக்ஞஸாமி சாஸ்திரிகள், ராவ்பகதூர் எஸ். அப்புசாஸ்திரிகள், எ. சுப்பிரமணிய அய்யர், ஆர். ஸ்வாமிநாதய்யர், வேதாந்தவிபூஷணம் எ. ஆர். ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் முதலிய பிரமுகர்கள் அங்கு கூடியிருந்தனர். வழக்கப்படி ஸ்ரீமான் கல்யாணசுந்தரசாஸ்திரிகள் ஆசார்யபூஜை ஆராதனமிவைகளை சொந்த செலவிலேயே நடத்திக்கொடுத்தனர். காலையில் பாஷ்யஉபநிஷத் கீதாபாராயணங்களும் ஆசார்யபூஜை விசேஷாலங்காரத்துடன் நன்கு நடத்தப்பட்டன. பத்திரிகையில் பிரசுரித்திருந்தபடி அச்சுப்புஸ்தகங்களும் ஓலைப்புஸ்தகங்களும் கொடுக்க ஆஸ்திக அன்பர்களுக்கு விருப்பமிருக்குமேயானால் அதை இப்பொழுது கொடுத்தால் பாடசாலை லைபெரிரிக்கு உபயோகமாயிருக்குமென்று அப்பாடசாலை கல்வியிலாகா அதிகாரி ஸ்ரீமான் சாஸ்திரிகள் கேட்டுக்கொண்டனர். இதை ஸ்ரீமான் ராவ்பகதூர் எஸ். அப்புசாஸ்திரிகள் ஆமோதித்து மேலும் பேசியதாவது:— புஸ்தககோசம் (லைபெரிரி) என்பது நமது தேசத்தில் கொஞ்சகாலமாய் ஏற்பட்டு அதன்மூலமாய் கல்வியபிவிருத்தி ஏற்பட்டுவருவதை நாம் அறிந்த விஷயம். ப்ராசீன காலங்களில் நமது முன்னோர்களாயிருந்த மகரிஷிகள் ஸர்வக்ஞர்களாயும் ஸர்வதந்திரஸ்வதந்திரர்களாயும் இருந்தபடியால் அக்காலங்களில் இதனுபயோகம் இல்லாமலே இருந்துவந்தது. இப்பொழுது காலத்தையனுஸரித்து அவரவர்களினறிவு வகுக்கப்பட்டபடியால் இது அவச்யமாகிறது.

இக்காலத்தில் இதன் பிரயோஜனத்தைமுன்னிட்டு இவ்வயமாவது இதை அபிவிருத்தி செய்ய முன்வந்த இப்பெரியோரை நாம் ஒவ்வொருவரும் போற்றாமலிருக்கமுடியாது. மேல்நாடுகளிலும் அநேக புஸ்தககோசங்களிருந்துவருகின்றனவென்பதை பத்திரிகைமூலமாயும் அங்கிருந்து வரும் புஸ்தகஜாப்தாமூலமாயும் நாம் அறிந்துவருகிறோம். நான்காவது வேதமாகிய அதர்வஸம்பந்தமான எல்லா புஸ்தகங்களும் அங்கு ஜாக்கிரதையாய் காத்துவைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் இங்கும் சேர்த்து வைப்போமானால் அது பிரயோஜனப்படக்கூடிய காலம் வராமல் போகாது. இது ஒவ்வொருவருடைய கார்யம் என்றெண்ணி

அவரவர்கள் முடிந்தவரையில் ஒத்தாசை செய்யவேண்டுமென விரும்புகிறேன் என்றார். ஸ்ரீமதப்பய்யதீக்ஷிதர் வம்சத்திலுதித்தவரும் அன்னவருக்கு சமமான யோக்யதையுடைய பிரம்மஸ்ரீ யெக்ஞஸாமி சாஸ்திரிகள் வார்த்தையை ஆக்ஞையாகக்கொண்டு ஸ்ரீமதப்பய்யதீக்ஷிதரால் இயற்றப்பட்ட இரண்டு புஸ்தகங்களை (ஒன்று வேதாந்தம், மற்றொன்று அலங்காரம்) இப்பொழுது சேர்ப்பிக்கிறேனென்று கொடுத்தார். ஸ்ரீசாஸ்திரியள் பெற்றுக் கொண்டு அன்னவருக்கு நன்றி பாராட்டினார்கள். வந்திருந்த எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் அக்ஷதை பலம்முதலிய பிரஸாதங்களளித்து $10\frac{1}{2}$-மணிக்கு அவரவர் சென்றனர். மாலை $3\frac{1}{2}$மணிக்கு ஒரு கூட்டம் கூடியது. நகரத்திலுள்ள கனவான்களும பக்தர்களும் விசேஷமாக 300 ஜனங்களுக்கதிகமாக வந்திருந்தனர். ஷை பாடசாலை தலைமையாசிரியர் வியாகரணசிரோமணி ஸ்ரீமான் திருவாதி டி. என். சுப்பிரமணிய சாஸ்திரிகள் எல்லோரையும் வரவேற்று ஸ்ரீமான் சாஸ்திரரத்னாகரம் மஹோபதேசக பிரம்மஸ்ரீ யெக்ஞஸாமி சாஸ்திரிகள் அவர்களை இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும்படி வேண்ட ஸ்ரீசாஸ்திரிகள் தலைமை வகித்தார். ஒரு மாணவரால் கடவுள் வாழ்த்து நடத்தப்பட்டது. பிறகு இரு மாணவர்களால் வடமொழியில் "ஆசார்யஜயந்திமஹோத்ஸவம்" என்ற விஷயமாய் ஸம்பாஷணை நடத்தப்பட்டது. இது அங்கிருந்தவர்களை விசேஷமாக ஸந்தோஷிக்கச்செய்தது. பிறகு ஊத்துக்காடு பிரம்மஸ்ரீ சங்கரகனபாடிகளால் வர்ணக்ரமம் சொல்லப்பட்டது. உடனே கும்பகோணம் ஸ்ரீராமமந்திரத்தில் ஸ்ரீமான் எ. சுப்பிரமணிய அய்யரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட உபயமீமாம்ஸா பாடசாலை வேதாந்த ஆசிரியர் வேதாந்த விபூஷணம் பிரம்மஸ்ரீ ஆங்கரை எ. ஆர். ரங்கசாமி சாஸ்திரிகள் அவர்களால் பகவத்பாதாளுடைய சரித்திரமும் அவர் மஹிமையும் அன்னவர் அவதாரபுருஷர் என்பதில் ஐயமில்லை என்பதை யுக்திக்கு ஒட்டியும் வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த பல சாற்றுகளுடன் பண்டிதபாமராஞ்சகமாக உபன்யஸித்தனர்.

பிறகு அக்ராஸனாதிபதி அவர்கள் பேசியதின் ஸாரமாவது:— உலகில் தன்பிரயோஜனத்தை கொஞ்சம்கூடவிரும்பாமல் உலகின் நன்மைக்காக எவர் பாடுபடுகிறாரோ அவரே "மஹாத்மா" எனப் போற்றப்படுகிறாரென்பது நமக்குத் தெரிந்தவிஷயம். நமதாசார்

யாளும் ஸ்வபிரயோஜனத்தை எதிர்பாராமல் உலகின் க்ஷேமத்திற்காகவும் மதத்தின் க்ஷேமத்திற்காகவும் இவ்வரும்பாடுபட்டுவந்தபடியால் மகாத்மாவென எல்லாராலும் போற்றப்பட்டார். துன்மதங்களை கண்டித்து அத்வைத மதத்தைஸ்தாபித்தனர். ஆகையால் இம்மஹானைநாம்எல்லாரும்கொண்டாடப்படக்கடைமைப்பட்டிருக்கிறோம். ஆசார்யபக்தி ஒவ்வொருவருக்குமிருக்கவேண்டும். அவரிடமிருந்து உபதேசம்பெற்று ஞானோதயமுண்டாகி முக்தி பெறவேண்டும். இவ்வித்தியார்த்திகள் சுமார்20வருஷகாலமாகஇஜ்ஜயந்தி உத்ஸவத்தை நடத்திவருகிறார்களெனத் தெரிகிறது. சில வருஷங்களில் சில இடையூர்கள் நேர்ந்தபோதிலும் அதைப்பொருட்படுத்தாமல் இப்பாடசாலையில் நடத்திவருவது ஆசாரியாளிடம் விசேஷபக்தியைக் காட்டுகின்றது. இப்பாடசாலை ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அன்னவர் 400-வருஷங்களுக்கு முன் விஜயநகரம் முதலிய இடங்களில் மந்திரியாக இருந்தனர். ஆஸ்திகாபிமானி வைதிக மதத்தைச்சேர்ந்தவர் சிவபக்தர் அத்வைதவித்யாசாரியர் என இவருக்கு ஓர் பட்டமுண்டென அவரது குமாரர் யக்ஞநாராயணதீக்ஷிதரால் இயற்றப்பட்ட ஸாஹித்யரத்னாகரம் என்ற புஸ்தகத்திலிருந்து வெளியாகிறது. பிறகு தஞ்சை மஹாராஜாவிடம் மந்திரியாக இருந்துவந்தனர். தஞ்சைமஹாராஜா அவர்கள் தீக்ஷிதரின் புத்திதிறமையையும் ஆசாரங்களையும் கண்டுகளித்து சில கிராமங்கள் தருவதாகக் கூறினர். அப்படியானால் காவேரிநதிகரையில் சில கிராமங்கள் வேண்டுமென்றார் தீக்ஷிதர். அவ்விதமே அரசன் கொடுத்தான். உடனே கும்பகோணம் முதலிய இடங்களில் ஸ்ரீ ராமர் கோவிலும் பட்டீசுவரம் ஆலயம் திருவாதி முதலியவிடங்களில் புஷ்யமண்டபங்களும் இவ்வூரில்ஐயங்தெருகாமாக்ஷிஜோசியர்தெருமுதலிய அக்ராஹாரங்களையும் கட்டி தானம் செய்தனர். எல்லா யாகங்களையும் விடாமல் இங்கு நடத்தினர். யாகம் செய்தவிடத்தில் வேதசாஸ்திர பாடசாலையை ஸ்தாபித்தனர். இராஜாவினால்தானம் செய்யப்பட்ட திரவியமானதால் இராஜாபாடசாலை என்று இதற்கு பெயர் வைத்தனர். ஆகையால் யாகசாலைத்தெரு என்று இவ்வீதிக்குப் பெயர் வந்தது. இப்பரிசுத்தமான இடத்தில் இப்புண்ய புருஷருடைய உத்ஸவத்தை நீங்கள் நடத்துவது உங்களுக்கும் இங்கு அதை தரிசிக்கவந்த எல்லாபக்தர்களுக்கும் விசேஷ சிரே

யஸ்ஸுடண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இவ்விதமாக இஜ்ஜயந்தி உத்ஸவமானது இவ்விடத்தில் வாவாவிருத்தியடைய வேண்டுவதுடன் கூட இங்குவந்த பக்தர்கள் ஒவ்வொருவரும் இனி தமது கிருஹத்தில் கொண்டாடி விசேஷபயன்களை அடையவேண்டுமென்றும் இன்னும் பல அறிய விஷயங்களுடன் கம்பீரமாகவும் உருக்கமாகவும் பேசுகிறார். பிறகு பாடசாலைத் தலைவரால் அக்ராசனுதிபதி அவர்களுக்கும் உபன்யாஸகர் அவர்களுக்கும் மாலை சூட்டினுர். வந்திருந்தவருக்கு சந்தன தாம்பூலம் வழங்கி இரவு 7-மணிக்கு இனிது நடந்தேரியது. சுபம்!

## உபயமீமாம்ஸா பாடசாலை கும்பகோணம்.

ஷை பாடசாலை ஸ்தாபகர் ஸ்ரீமான் எ. சுப்பிரமணிஅய்யர் அவர்களால் 3-5-30 சனிக்கிழமை காலையில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவம் விமரிசையாய் கொண்டாடப்பட்டது. காலையில் உபநிஷத், கீதை, பாஷ்யபாராயணங்கள் நடைபெற்றது. ஸ்ரீமான் சாஸ்திரரத்னுகரம் மஹோபதேசக ராஜமன்னுர்குடி பிரம்மஸ்ரீ யக்ஞேஸ்வரசாஸ்திரிகள் ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவத்தின் அவச்யத்தையும் ஆசார்ய மகிமையையும் உபன்யசித்தார்கள்.

சுபம். K. R. வைத்தினுதசாஸ்திரிகள்,
மேலக்காவேரி.

---

கும்பகோணத்தில்

# சென்னை மாகாண பிராம்மணர் மஹாநாடு.

1930-ஸு மே-மீ 31வ, ஜூன்-மீ 1வ

தஞ்சாவூர் ஜில்லா பிராம்மண மஹாஸபையின் ஆதரவின் கீழ் சென்ற 15வ தினம் நடந்த பிராம்மணமஹாஜனக்கூட்டத்தில் 1930-ஸு மேமீ 31வ, ஜூன்-மீ 1வ இரண்டு தினங்களிலும் கும்பகோணத்தில் சென்னைமாகாண பிராம்மணர் மஹாநாடு கூட்டி பொதுவாய் தேசக்ஷேமவிஷயமாகவும் விசேஷமாய் பிராம்மணஸமூகத்தின் க்ஷேமாபிவிருத்தியைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பிரம்மஸ்ரீ திவான்பகதூர் V. K. ராமாநுஜாசாரியார் அவர்கள் உபசாரணைக்கமிட்டியின் அக்ராசனம் வகிப்பதற்கு அங்கீகரித்திருக்கிறார்கள்.

சென்னை அட்வகேட் பிர்ம்மஸ்ரீ V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் மகாநாட்டிற்கு அக்ராசனம் வகிப்பதாக அங்கீகரித்திருக்கிறார்கள்.

சென்ற ஏப்ரல் முதல்தேதிமுதல் விவாஹவயதுச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. அந்தச்சட்டத்தின் கொடுமைகள் ஆஸ்திகஜனங்களை பாதிக்காமலிருக்கும்பொருட்டு சில திருத்த மசோதாக்கள் இந்திய சட்டஸபையில் கொண்டுவரப்பட்டு, சீக்கிரம் ஆலோசனைக்கு எடுக்கப்படும். பூர்ணஸ்வராஜ்யம் அடைய வேண்டியதற்காக இயக்கமும் உப்பு ஸத்யாக்ரஹப்போரும் நமது நாட்டில் இப்போது வெகு மும்மரமாக நடந்துகொண்டிருக்கின்றன. சைமன் கமிஷன் சிபார்சுகள் சீக்கிரம் வெளிவந்துவிடும். ராஜீய அமைப்பில் பெரிய மாறுதல்கள் உடனே உண்டாகக் காத்திருக்கின்றன. இந்நாள் நடந்துவரும் போராட்டங்களின்மூலம் எவ்விதப்பயன்கள் உண்டானாலும் நாட்டின்ஸ்திதியும் அதிலுள்ள ஒவ்வொரு ஸமூகத்தாரின் நிலைமையும் ஆழ்ந்து பாதிக்கப்படுமென்பதில் ஸந்தேகமில்லை. எல்லாக் கக்ஷிமகாநாடும் (All Parties' Conference) இன்னும் முடிவான தீர்ப்புகள் ஒன்றும் வெளியிடவில்லை; ஆனால் அம்மகாநாட்டில் ஆஸ்திகர்களின்பிரதிநிதிகளெனச் சொல்லக்கூடியவர்கள்சேர்ந்திருக்கவில்லை. சிறுபான்மைத்தொகுதியினர்களைக் காப்பதற்காக ஏற்பட்டுள்ள கூட்டத்தினிடையிலும் பிராம்மணர்கள் கலந்துகொள்ளவில்லை.

காங்கிரஸ்மகாஸபை தேசத்துக்கே பிரதானமான பெரும் ஸ்தாபனமாயினும் எல்லாஸமூஹத்தாருக்கும் பொதுப்பட்டதான ராஜீயவிஷயங்களைமட்டும் குறித்தே அதற்கு அந்த மேல்நிலைமை உண்டு. மதாசாரங்களிலும் ஸமூகவாழ்க்கை முறைகளிலும், தமக்குத்தனியே உரித்தான வித்யைகள் விஷயங்களிலும், மற்றும் அந்தந்த ஸமூஹத்தார் ஈனமும் எழ்மையுமின்றி வாழ்வதற்குரிய ஸாதனங்கள் விஷயமாகவும், இந்நாட்டிலுள்ள பலவகைப்பட்ட ஸமூகத்தார் யாவருக்குமே காங்கிரஸ் மகாஸபை பிரதிநிதியாய் நின்று ஆதரவுடன் அறிந்து பரிவுடன் காக்கக்கூடிய தன்மையும் சக்தியுமுள்ளது என்று எண்ணுதல் யதார்த்த விரோதமாகும். இப்போதுதான் சிறிதுகாலத்துக்கு முன் பெரிய தேசீயத் தலைவர்களும் காங்கிரஸ்வாதிகளும் சாரதாச்சட்டம்நிறைவேறுவதற்கு உடந்தையாயிருந்தார்கள். அவரவர் மனச்சாக்ஷிக்கேற்றவாறு

நடப்பதற்கு அவரவர்களுக்குரிமையுண்டு, மதாசார விஷயங்களில் சட்டம் பிரவேசிப்பது சரியன்று என்ற பரமமான கொள்கையடியோடுமறந்து அவ்விதம்செய்யத்துணிந்தார்கள். ராஜீயஸ்வதந்தரம், வேண்டும்ஸ்வயநிர்ணயஉரிமை எங்களுக்கு வேண்டும், என்றுபெரும்போர்தொடங்கி இப்போநடத்திவருகிறோம் ஆனால் ஸ்வராஜ்யம் வந்தபின் சிறுபான்மைத் தொகுதியுள்ள ஸமூகத்தாரின் ஸ்திதி எவ்விதமிருக்கும் என்பது எல்லோரும் ஒத்து நிலைப்பட்டாலொழிய ஸ்வராஜ்யப்போராட்டம் முடிவான பிரயோஜனத்தைத் தராது. புதிதாய் வரப்போகும் ராஜாங்கமாறுதல்களினால் எங்கள் மதாசாரங்களுக்கும் எங்கள் பாஷைகளுக்கும் வித்யாபிவிருத்திகளுக்கும் எங்கள் ஐஹிகக்ஷேமங்களுக்கும் எவ்விதக் கேடுகள்நேரிடுமோ என்று பயங்கொண்டிருப்பதாய் அனேக வகுப்பார்கள் வெளியிட்டுச் சொல்லி வருகிறார்கள். ஆனால் பிரதான ராஜீயவாதிகள் கூட இந்த விஷயத்தில் பொறுப்புடன் கவனித்து சரியாய் தீர்ப்பிடவேண்டிய அவசியம் இருப்பதாய் எண்ணுவதாகத்தெரியவில்லை. அவர்கள்சரியாய்தெரிந்திருந்தார்களானால்சாரதாச்சட்டம் நிறைவேறியிராது. எந்தப் பிரத்யேக மனுஷ்யனையோ அல்லது ஸமூகத்தாரையோ அவர்கள் பிராணாதாரமாகக்கொண்டிருக்கும் கொள்கைகளை விட்டுவிடும்படி ராஜாங்கத்தில் பலாத்காரத்தைக் கொண்டுநிர்ப்பந்திப்பதுநியாயமாகுமா என்பதேஇப்போதுதீர்க்கமாய் ஆராய்ந்து தீர்மானிக்கவேண்டிய விஷயம். அம்மாதிரியானபலாத்காரம் முற்றிலும் வெறுக்கத்தக்கது எல்லா விதத்தாலும் எதிர்க்கத் தக்கதுஎன்பதே தர்மமும் நியாயமும்பொருந்தியசித்தாந்தமாகும். ஸத்யாக்ரஹியை அடக்குவதற்கு அதிகாரி பிரயோகித்தாலும், இந்துஸமூகத்துக்குரியவியவஸ்தைகளை விட்டவர்கள், தம்முடைய ஸமூஹவியவஸ்தைகளை விடக்கூடாதென்ற கொள்கையுடையவர்களை நிர்பந்திக்க உபயோகித்தாலும் பலாத்காரமானது அநீதமும் அடாததுமாகும்.

தவிரவும், பிராம்மணஜாதியின் ஸமூகவாழ்க்கை அநாதிகாலமாய் தொடர்ந்து வரும் வழிகளிலும், அந்த ஸமூஹத்தாரே இச்சித்து ஏற்கும் வழிகளிலும், செல்லுவதற்கு இடமும் உரிமையும் உண்டா, அல்லது தன்புத்தியின் அகலத்துக்குள்உலகமேஅடங்க வேண்டுமென்ற பிடிவாதம் கொண்ட சீர்திருத்தக்காரர்களாலும் ஸமயம் கண்டு லாபமடையத் தம் கொள்கைகளையும் நடத்தையையும் எளிதில் மாற்றிக்கொள்ளும் ராஜதந்திரிகளாலும் அப்பா

போது இயற்றப்படும் சட்டதிட்டங்களால் பிராமணஜாதியின் ஸமூஹவாழ்க்கை இடிபட்டும், குலைந்தும்போகும்படி விட்டுவிடுதல் தகுதியா என்று பிராம்மணஜாதியார் தீர்க்கமாய் சிந்திக்க வேண்டும். மேலும் பிராம்மணஜாதியிற்பிறந்த காரணத்தினால் மாத்திரம் பிராமணர்கள் பலவிதமானஉபத்திரவங்களுக்கும் அநீதிகளுக்கும் ஆளாகும்படி நேரிடுதல் ஏற்குமா என்றும் ஆலோசிக்க வேண்டும்.

பிராம்மணஜாதியின் ஸ்வரூபமும் அவர்களுக்குரிய ஸநாதனமான தர்மங்களும் ஆசாரங்களும் மறையாமலும் மலினமடையாமலும் இருப்பதற்கு வேண்டியதான உபாயங்களைச் சிந்தித்துத் தேடவேண்டும்.

இவையெல்லாம் உத்தேசித்து தமிழர்கள், ஆந்திரர்கள், கேரளர்கள், கர்னாடகர்கள் எல்லாப் பிராம்மணர்களும் கூடக் கூடிய சென்னைமாகாண பிராம்மணர் மகாநாடு, கும்பகோணத்தில் நடத்துவதற்கு ஆரம்பித்து ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தர்மாபிமானமும், ஜாத்யபிமானமும் உள்ள எல்லா பிராம்மணர்களும் ஆதரித்து பிரதி ஊர்களிலும் கூட்டங்கள் கூடி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஷடி மகாநாட்டிற்கு அனுப்பி வைக்கும்படியாய் பிரார்த்திக்கிறோம்.

மகாநாட்டில் ஆலோசிக்கவேண்டிய விஷயங்களையும் தீர்மானங்களையும் ஸூசிப்பித்து ஒருவாரம் முன்னதாக காரியதரிசிக்கு எழுதித் தெரிவித்தால் நலம்.

வெளியூர் பிரதிநிதிகளுக்கு தங்கவும் போஜனாதிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

M. K. வைத்தியநாத அய்யர், அட்வகேட்.
அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்,
திருக்கருகாவூர், T.L.ஸுப்பய்யர், B.A.,B.L.,
மிராசுதார்.
V. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்.
சேங்காலிபுரம், V. பஞ்சாபகேசய்யர், மிராசுதார்.
S. மகாலிங்கய்யர்,

கும்பகோணம். காரியதரிசிகள்.

18—5—30

---

# கடன் கூடாது.

(198-வது பக்கத்தொடர்ச்சி.)

தர்ம:- தாதா எனக்கு மிகவும்ஆச்சர்யமாயிருக்கிறது ஊரில் வந்து பத்ரகன்என்ன செய்தான்? எப்படிப் பிழைத்தான்? பந்துக்களிடம் என்ன சொன்னான்.

பீஷ்:— பந்துக்கள் பார்த்து வெறுத்து அவனிடம் அதிக கோபங்கொண்டு ஹே பாபி சுற்றத்தாருக்கும் மானக்கேடு செய்பவனே ஓடிப்போ. இங்கு இருக்காதே ஏன் வந்தாய்? என்று வெரட்டினார்கள்.

தர்ம:— பத்ரகன் என்ன சொன்னான்?

பீஷ்ம:— பந்துக்களே! கோபிக்காதீர்கள். என் வார்த்தையைச் சற்று தயவுசெய்து கேளுங்கள். "நான் தங்களால் வெரட்டப்பட்டு கங்கைக்குச் சென்றேன் அங்குள்ள மறையோர்கள் என் காரியத்தால் சந்தோஷப்பட்டு இந்த இரண்டு வாஹனங்களைக் கொடுத்தார்கள்" என்று சொல்ல, பந்துக்கள் அப்படியானால் நீ இல்லறத்தை நடத்திக்கொண்டுவா. அதனால் மேன்மை ஏற்படும் என்று சொல்லிப்போனார்கள்.

தர்ம:— இல்லறத்தை நடத்தினா?

பீஷ்ம:— நடத்தவாவது? நினைக்கவாவது? இல்லை. அவர்களை இம்மாதிரி வஞ்சனை செய்து அந்த இரண்டு மாடுகளையும் உழப் பழக்குவதற்கு கழனிக்கு ஓட்டிச்சென்றான்.

தர்ம:— பிறகு என்ன செய்தான்?

பீஷ்ம:— ஓர் நீண்ட ஏற்காலுள்ள கலப்பை. காலில் பாதாகைஷ தோலினால் முறுக்கின கயர், (வடகயர்) தார்க்கழி, இவைகளுடன் தலையில் கம்பளியைச் சுற்றிக்கொண்டும் தோளில் கலப்பையை வகித்துக்கொண்டும், முன்னும் பின்னும், தொங்கவிடப்பட்ட கௌபீனத்தைத் தரித்துக்கொண்டும், மாடுகளைப் 'போப் போ உங்கள் ரத்தத்தை உரிஞ்சிவிடுகிறேன்' என்று சொல்லிக்கொண்டும் உழவுதளுக்கு வந்து ஏரைக்கட்டி உழுதவந்தான்.

தர்ம:—ஆச்சரியம்! ஆச்சரியம்!!

பீஷ்ம:—மேலும் கேள். மத்யான்ன வேளையில்இவனுக்குத்தாகம் அதிகரிக்க களைப்படைந்த கிடாவை தொந்தரைசெய்தான்.

வேலையின் கஷ்டத்தினாலும், வெய்யிலின் தாபத்தினாலும், நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு கண்கள் சுழள இறந்தது போல் பூமியில் விழுந்தது.

தர்ம: — தாதா! கேழ்க்கவே பயங்காமாயிருக்கிறது. பின்னும் என்ன செய்தான்?

பீஷ்ம:— தடிகளாலும், கயறுகளாலும், கல்லாலும், மண்ணாலும் கைகளாலும், கால்களாலும்அடித்து, உதைத்து,தொந்தரை செய்தான். தானும் பசி, தாகங்களால் களைத்துப்பெருமூச்சு விட்டு யோசிக்கலானான். பூமியிலும் படுத்துக்கொண்டான்.

தர்ம:— இரக்கமுண்டாகவில்லையா?

பீஷ்ம:— இல்லை. பிறகு எழுந்து கோபத்தால் கண்கள் சிவக்க பக்கத்தில் வருத்தமுற்றிருக்கும், கருப்புக் காளையைப்பார்த்துக் குரூரமாய் ஏ காளையே; நீ நட நீ மஹாபலமுள்ளவன், இந்தக்கிடா ஜடம், புத்திக்கெட்டது, உனக்கீடாகாது என்று சொல்லவும் முன் பின் அறியாத அந்த பத்ரகனுடைய பயங்கரமான யுக்தமில்லாத வார்த்தையைக் கேட்டு நாற்புறமும் சுற்றிப்பார்த்து காரிக்காளை கீழ்கண்டமாதிரி சொல்லவாரம்பித்தது.

காகாளை:— ஓ பிராமணா! என் வீணாகப் பாபத்தைச் செய்கிறீர். நிலையில்லா இச்சரீரத்தினால் நிலையென்றெண்ணுகிறாய். ஓர் அணுவாயினும், உம்மால் தர்மம் செய்யப்படவில்லை. கோரமான அனேகப்பிறவிகளைக் கொடுக்கக் கூடிய பாபங்களை அதிகமாகச் செய்திருக்கிறாய். உலகில் பாபிகள் உண்டு. ஆனால் உனக்குச் சமம் ஒருவருமில்லை. நீ செய்த பாபத்தினால் உன்னுடைய வம்சத்தவர் எல்லோரும் நாகத்தையடைகின்றனர். அவர்களை ஸ்வதர்மானுஷ்டானத்தால்கரையேற்றிவை. தவம்புரிந்து சுவர்க்கத்தைப்பெறு. தர்மமொன்றேமனிதர்களுக்கு ஸ்வர்க்க மோக்ஷங்களைக் கொடுக்கக் கூடியவை என்றது.

இவ்வித ஆச்சர்யமான வாக்கியத்தைக் கேட்டுபயந்து, மயிர் கூச்சரிய பத்திரகன் சொல்லலானான்,

பத்ரகன்:— (தழதழத்த குரலுடன்) ஹே விருஷபராஜாவே! எல்லா தர்மத்தையும் அறிந்தவனே! பொறுத்துக்கொள்ள வேணும். நான் மஹாபாபி, பாபத்தையே செய்பவன். பாப

ரூபமுள்ளவன். என்னை தயவினால் காப்பாற்றவேண்டும். எல்லாதர்மத்தையும் விட்டவன். தர்மக்ஞர்கள் என்போன்ற பாபிகளைக் காப்பாற்றுவார்கள். ஆகையால் தர்மஸ்வரூபத்தை உபதேசிக்கவேண்டும் என்று நமஸ்கரித்துவேண்டினான் மிகவும் இரக்கப்படக் கூடியதான அவன் வார்த்தையைக் கேட்டுக் காளை மேகம்போல் கர்ஜித்து பதில் சொல்லவாரம்பித்தது.

காளை:— ஓ வேதியரே! கேளும், தர்ம, அதர்மங்களைச் சொல்லுகிறேன். இவைகளைக் கேட்பதினாலேயே பாபத்திலிருந்து விடுதலை ஏற்படும். அதாவது எல்லா தானங்களிலும் அன்னதானம் சிறந்தது. அதனால் அன்னமளிப்பவன் ஸாயுஜ்யத்தைப் பெறுகிறான். பசு, பூமி, எள்ளு, சுவர்ணம், புஸ்தகம் கன்னிகை, ஸாளக்கிராமம், சிவலிங்கம், வீடு, கிருஷ்ணாஜினம் முதலானவைகளை பிராமணனுக்குத் தானம் செய்தால் அவன் விஷ்ணுவின் பதத்தையடைகிறான்.

பத்திரகன்:— ஐயோ! நான் மஹாதரித்திரனாயிற்றே, தானம் செய்யவும் யோக்கியனில்லையே; என் செய்வேன், தானமில்லாமல் ஏதாவது புண்ணியமிருந்தால் அதைச் சொல்.

காளை:— காலையில் அருணோதயத்திற்கு முன் படுக்கையை விட்டெழுந்து எங்கும் நிறைந்த விஷ்ணுவை கீர்த்தனம் செய்தால்அவனும் விஷ்ணுபதமடைவான். ஸ்னானம், ஜபம், ஹோமம், போஜனம், பூஜை, முதலிய காலங்களில் மௌனமாய் இருப்பவன் சுவர்க்கமடைவான். தீர்த்தம், அதிதி, விஷ்ணு, தாய், தகப்பன், குரு, ஸன்யாஸி, இவர்களிடத்தில் பக்திசெய்தவன் பிரம்மபதமடைவான். விஷ்ணு பூஜையிலும், புராணம் கேட்பதிலும், தர்மசாஸ்திரத்திலும், ஸ்னானத்திலும், பக்தியுள்ளவன் முக்திபெறுவான். திரவியத்தாலும், காரியத்தாலும், வார்த்தையினாலும், பிராமணனுக்கு ஹிதம்செய்பவன், மறுபிறப்பற்ற பிர்மபதமடைகிறான. எவன் சர்வப்பிராணிகளிடத்திலும், சத்துரு, மித்திரர்களிடத்திலும், ஸமபாவமுடையவனாகவும், எல்லோருக்கும் எச்சமயத்திலும், ஹிதத்தைச் செய்பவனாய் இருக்கிறானோ அவன் தேவலோகம் அடைகிறான். பிறர் மனைவி, திரவியம், இவைகளிலும்

பிறரை தூஷிப்பதிலும் வெறுப்புடையவர்களும், உண்மை பேசுபவர்களும், விண்ணுலகை வீடாகப் பெறுகிறார்கள்.

பத்திரகன்:— எல்லா தர்மங்களையும் அறிந்த பூஜ்யனே! நாகத்தைக் கொடுக்கக் கூடிய பாபத்தின் காரணத்தைச் சொல்?

காளை:— பிராணிகளிடத்தில் இறக்கமில்லாமலிருப்பவனும், புண்படப் பேசுபவனும், அதர்மத்தில் இருப்பவனும், ஓர் நாகவாசி என்றறிந்துகொள். ஸ்னானமில்லாமலும், பிதிருகார்யங்களை விட்டும், குரு, தைவம், பிராமணன், பந்துக்கள், அக்னி, சூரியன், பசுக்கூட்டம், புராணம், தர்மசாஸ்திரம், இவைகளை நிந்திக்கின்றவன் நாகத்தையடைகிறான். ஸ்னான ஜபஹோம காலங்களில் வீண் வார்த்தை பேசுபவனும், கோவிலில் வம்பு பேசுபவர்களும், பிதிர்கார்யம, தேவகாரியம், அக்னிகாரியம் இவைகளை விட்டவர்களும், தருவதாகச் சொல்லி, பிறகுளமாற்றுகிறவர்களும், நாகவிருந்தினர் அதிதியினிடம் இல்லை இல்லை என்பார், நாக்கை எமதூதர்கள் நருக்கி, நெருப்பில் எரிகிறார்கள். தாம்பூலம், தண்ணீர், தடுக்கு, தரை இவைகளைக் கூட தாராதவர்கள் நாகுலகிற்கேசெல்வார்கள். இவைகளைவிட பெரிதான ஓர் பாபமுண்டு. அதாவது கலப்பையைப் பிடித்து உழுவதுதான் எந்த மூர்க்கனான பிராமணன் மேழியைப் பிடித்து பூமியை உழுவனோ அவன் பிர்ம்மஹத்தி செய்தவனாகிறான். தேவர், பிதிருக்கள், கந்தர்வர்கள், லக்ஷ்மீபதியானவிஷ்ணு, இவர்கள் சபிக்கிறார்கள். அவனைக்கண்டு பாக்யத்தை இழந்தவனே! நாகிற் புகுவாயாக, உன் வம்சத்தில் பிறந்தவர்கள் எல்லா கர்மத்தையும் விட்டவர்களாகப்போகிறார்கள். தரித்திரர்களாயும், அங்கஹீனர்களாயும் ஸந்ததியில்லாதவர்களாயுமாவார்கள். பந்துக்களாலும் நிந்திக்கப்பட்டு நாகத்திற்கு நிச்சயமாகச் செல்லப் போகிறார்கள். கும்பீபாகம், ரௌரவம், அஸிபத்ரம் தப்ததைலம், முதலிய நாகங்களில் வசிப்பார்கள் என்று சாபம் கொடுத்துச் செல்லுகின்றனர். ஆகையால் தெரிந்தவன் பாபத்தைச் செய்யக்கூடாது. (தொடரும்)

வி. உமாமகேசுவரசாஸ்திரிகள்.